**தேதி :** 11.11.2025 **SC.No. :** 495/2023 PW :3 கவின்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கொத்தனார் வேலைக்காக நான் வெளியூர் செல்வது வழக்கம் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் வெளியூருக்கு வேலைக்கு செல்லவில்லை. மாரிச்செல்வம் என்னுடைய பெரியப்பா மகன் என்றால் சரிதான். அ.சா.2 வசந்தா எனக்கு பெரியம்மா முறை வேண்டும். அ.சா.14 பால்ராஜ் என்பவர் அ.சா.1 க்கு தாய்மாமா முறை வேண்டும். அ.சா.1 மாரிச்செல்வத்திற்கு கஸ்தூரி என்ற சகோதரி உண்டு என்றால் சரிதான். கூட்டத்தில் பார்த்து கொண்டிருந்தவர்கள் யார், யார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் அரை மணி நேரம் கழித்து சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் 10 நிமிடம் கழித்து சென்றேன். நான் சென்றபோது, தெருவில் நின்ற நபர்கள் எதிரி, எங்க பெரியம்மாவை வெட்டி விட்டு சென்றதாக சொன்னார்கள். எதிரி எந்த திசையில் சென்றார் என்று நான் பார்க்கவில்லை. சம்பவயிடத்தில் வசந்தன் என்பவரது வீடு இல்லை என்றால், வசந்தன் யாரென்று எனக்கு தெரியாது. வடிவேல், பார்வதி ஆகியோர்கள் பெரியம்மாவுக்கு உறவுமுறை என்றால் எனக்கு தெரியாது. பால்ராஜீக்கு சுரண்டை காவல்நிலைய ஜீப்பை உடைத்ததாக ஒரு வழக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய அப்பா அதிமுக கட்சியை சார்ந்தவரா? என்றால் இல்லை. ஆம்புலன்ஸை யார் ஓட்டிக்கொண்டு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸிற்கு யார் போன் செய்தார்கள் என்றால் கண்ணன் என்பவர் போன் செய்தார். மாரிச்செல்வம் நான் செல்லும் போது அங்கு நின்றார். இந்த வழக்கு சம்பந்தமாக எஸ்.ஐ ஜெயராஜ் என்னை

விசாரித்தாரா, என்றால் பெயர் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் வைத்து தான் என்னை விசாரித்தார். மாண்புமிகு.கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் எஸ்.சி.எண்.316/2019 என்ற வழக்கில் அ.சா.14 பால்ராஜ் என்பவர் மீது அரசுக்கு பாத்தியப்பட்ட ஜீப்பை உடைத்ததற்காக ஒரு வழக்கு உள்ளது என்றாலும், எதிரி சாட்சியம் அளித்துள்ளார் என்றாலும், அந்த முன்பகை காரணமாகவும், முதல்விசாரணையில் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அவதூறான வார்த்தைகளால் பேசவில்லை என்றாலும், எனது பெரியம்மாவை தாக்கவில்லை என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **–**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.12 12:06:11 +0530